# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.

| MCOP. No. 134/2012 | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர். ஆர். கோகுல்ராஜ் | Religion: | இந்து |
| Father's Name: | ராஜு | Caste: | |
| Village: | கோயம்புத்தூர் | Calling: | மருத்துவர், கங்கா மருத்துவமனை, கோயம்புத்தூர் |
| Taluk: | கோயம்புத்தூர் | Age: | 26 |

Date: 1.8.2019 – PW –2

அழைப்பாணையின் பேரில் மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை.

நான் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க மருத்துவர் திரு. மதுபெரியசாமி என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர் வேறு அறுவை சிகிச்சையில் ஈடுபட்டுள்ளபடியால் இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அழைப்பாணையில் அத்தியப்பக்கவுண்டர் மகன் சுந்தரம் என்பவருடைய ஊனச்சான்று தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்படி நபருடைய ஊனச்சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். மேற்படி அத்தியப்பக்கவுண்டர் மகன் சுந்தரம் என்பவரை மருத்துவர் திரு. மதுபெரியசாமி என்பவர் பரிசோதனை செய்து சான்று வழங்கியுள்ளார். ஊனச்சான்றிதழ் ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்படுகிறது (எதிர்மனுதாரர் தரப்பில் சான்றிதழ் வழங்கியுள்ள மருத்துவர் மூலம் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) அனுமதி கடிதம் ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நோயாளிக்கு வலது கால் பெருவிரலானது அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டிருக்கிறது. வலது கால் பாதத்தில் எலும்புகள் நொறுங்கியுள்ளது. அவருக்கு ஏற்பட்ட ஊனமானது நிரந்தர ஊனம் ஆகும். 43 சதவீதம் என சான்று வழங்கப்பட்டுள்ளது. அதனால் நோயாளிக்கு நடப்பதிலும், படி ஏறுவதிலும் சிரமம் இருக்கும். அவரால் ஓட முடியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4, 5 மற்றும் 6 ஆக டிஸ்சார்ஜ் சம்மரி, மற்றும் காயச்சான்றிதழ் எங்களது மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆன மருத்துவ பில்களும் எங்களது மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** - அழைப்பாணையாளது திரு,. மதுபெரியசாமி என்பவருக்குத்தான் அனுப்பப்பட்டிருந்தது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஊனச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள மருத்துவர்களில் பெயர் பட்டியலிலும்

எனது பெயர் இல்லை என்றால் ஆமாம். அதில் யார் யார் பெயர் உள்ளது என்றால் திரு.மதுபெரியசாமி, திரு.ராய்வில்சன் ஆம்ஸ்ட்ராங் மற்றும் திரு.சிவசுப்பிரமணியம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBBS படித்துள்ளேன். நான் பொது மருத்துவம் மட்டும் படித்துள்ளதால் தனிப்பட்ட எலும்பு முறிவு சிகிச்சை குறித்து சாட்சியம் அளிப்பது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணமும் எனது சாட்சியமும் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சிசிக்சை அளித்த மருத்துவரோ மருத்துவ குழுத்தில் இருந்தோ ஊனச்சான்றிதழ் வழங்கி சாட்சியம் அளித்தால் அது ஏற்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Sd/- R. Gokulraj

Sd/- M. Mekala Mythili,
Sub Judge, Sankari.